# DEPOSITION OF WITNESS

## Crl.Misc.39
## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சக்திவேல் | Caste | : | |
| S/o. | : | கைலாசம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 19.09.2024.

A1 & A2 present.

**முதல் விசாரணை;**

நான் மல்லூர், வேங்காம்பட்டியில் குடியிருக்கிறேன். நான் கிழங்கு வியாபாரம் செய்து வருகிறேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் கிழங்கு வியாபாரம் செய்து வந்தேன். சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் வியாபாரம் முடித்துவிட்டு சந்தியூர் பஸ்ஸ்டாப்பிற்கு சாப்பிடுவதற்காக வந்து எனது இருசக்கர வாகனத்தை நிறுத்தினேன். அப்போது நாமக்கல் பக்கமிருந்து மணல் லாரி ஒன்று வேகமாக வந்துகொண்டிருந்தது. ஜோதி பஸ் சேலத்திலிருந்து நாமக்கல் நோக்கி

வந்து கொண்டிருந்தது. டிப்பர் லாரி தட்டுதடுமாறி ரோட்டில் போட்டிருந்த ஆங்கிலில் மோதி இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் மீது மோதி இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு குழந்தையும் இரண்டு நபர்களும் இறந்துவிட்டார்கள்.

பிறகு கூட்டம் அதிகமாகிவிட்டது. நானும் அங்கு சென்றேன். அப்போது பஸ்சில் இருந்த ஒரு அம்மா இறந்துவிட்டார். டிப்பர் லாரியில் இருந்த மணல் கீழே கொட்டிவிட்டது. இருசக்கர வாகனத்தில் வந்த குழந்தையை தேடிப்பார்த்தபோது அந்த குழந்தையை மணல் மூடியிருந்தது. குழந்தையை மீட்டு ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். காயம்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

என்னிடம் காண்பிக்கப்படும் போட்டோவில் உள்ள மணல் லோடுடன் உள்ள டிப்பர்லாரிதான் விபத்தை ஏற்படுத்திய லாரி ஆகும். டிப்பர் லாரியின் க்ளீனருக்கும் விபத்தில் காயம் ஏற்பட்டது. அவரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். டிப்பர் லாரியின் டிரைவரை அங்கிருந்த பொது மக்கள் பிடியுங்கள் என்று கூச்சலிட்டார்கள். அப்போது டிப்பர் லாரி டிரைவர் லாரியிலிருந்து இறங்கி கிழக்கு பக்கமாக ஓடிவிட்டார். ஆஜர் 1வது எதிரிதான் டிப்பர் லாரியின் ஓட்டுனர் ஆவார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார். நான் நடந்த விபத்தை குறித்து போலிசாரிடம் சொன்னேன். போலிசார் நான் சொன்னதை பதிவு செய்து கொண்டார்கள்.

1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்தின்போது எங்கே நான் குடியிருந்தேன் என்றால் நான்

சம்பவ இடத்திற்கு அருகே குடியிருக்கவில்லை. சம்பவம் நடந்த இடத்தற்கு 3 கிலோமீட்டர் தள்ளி மேற்குபக்கமாக குடியிருந்து வந்தேன். நான் இருசக்கர வாகனத்தை சாலையின் எந்த பக்கம் நிறுத்தினேன் என்றால் சாலையின் மேற்கு திசையில் நிறுத்தினேன். ஆனந்த் ஓட்டல் அருகே இருசக்கர வாகனத்தை நிறுத்தினேன். நான் தனியாக தான் வந்தேன். எவ்வளவு நேரம் சம்பவ இடத்தில் இருந்தேன் என்றால் வண்டியை நிறுத்தி 5 விநாடிகளில் விபத்து ஏற்பட்டது. லாரி ஹார்ன் அடித்துக்கொண்டு வந்தது. கிழக்குதிசையிலிருந்து ஜோதி பேருந்து வந்து கொண்டிருந்தது. விபத்து நடந்த பிறகு பேருந்து ரோட்டில் நின்றது. விபத்து நடந்த பேருந்தின் ஓட்டுனர் மற்றும் நடத்துனரை நான் சம்பவ இடத்தில் பார்க்கவில்லை. வழக்கு நிமித்தமாக போலிசார் சம்பவம் நடந்து 3,4 நாட்கள் கழித்து எனது வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். நான் சொல்லச்சொல்ல அப்போது போலிசார் எழுதிக்கொண்டார்களா என்றால் ஆம். அப்போது என்னிடம் கையெழுத்து கேட்டார்களா என்றால் கேட்டார்கள். அப்போது நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். நான் சம்பவ இடத்தில் எனது வண்டியை நிறுத்தவில்லை என்றும் நான் விபத்து பார்க்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியை சம்பவ இடத்தில் நான் பார்த்ததாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. நான் மல்லூர் காவல்நிலையத்தின் இருப்பு சாட்சி என்றும் எனவே போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுனர் என்று போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.